(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 64 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, சனவரி 21, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0603 / '08

1.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரன,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அதிகார சபை என்ற பெயரில் ஒரு நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அது எந்த மாவட்டத்தில் செயற்படுகின்றது,

(iii) மேற்படி அதிகார சபையினால் எவ்வகையான உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படுகின்றன,

(iv) கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு உற்பத்தி வகையின் பொருட்டும் எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது,

(v) செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த அதிகார சபையினால் ஒவ்வொரு ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு தனித்தனியாக எவ்வளவு,

(ii) ஒவ்வொரு வகை நெல்லிலும் எவ்வளவு தொகை எந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டது,

(iii) இவை எந்த நோக்கத்திற்காக் கொள்வனவு செய்யப்பட்டன,

(iv) இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல் எவ்விடயத்திற்காகப் பயன் படுத்தப்பட்டது,

(v) அவை தனியார் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதா,

(vi) ஆமெனில், கொள்வனவாளர்களது பெயர், முகவரி, கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, நெல் வகை, ஒரு கிலோ நெல்லின் விலை மற்றும் விற்பனை செய்யப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0606 / ’08

2.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விசேட கருத்திட்ட அமைச்சுக்காக 2007 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நடைமுறைச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 37,500,000/= எப்போதிருந்து செலவிடப்படுகிறது என்பதையும்,

(ii) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) நடைமுறைச் செலவுகளைப் பயன்படுத்தி கொள்வனவுகள் செய்யப் பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், எத்தகைய பொருட்கள் எந்தெந்த விலை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்,

(v) மூலதனச் செலவுகளுக்கான ரூபா. 10,800,000/= நிதி ஒதுக்கத்திலிருந்து குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(vi) அந்தப் பணத்தில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(vii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0652 / ’08

3.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குருணாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் மடஹபொல, மெதகந்த மற்றும் பரகஹஎல மலைகளை அண்மித்துள்ள பிரதேசத்திலுள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றையும், மடஹபொல மெதகந்த மற்றும் பரகஹஎல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியும் விவசாயிகளது காணிகளின் உரிமை சம்பந்தமான சட்ட ரீதியான தன்மை யாது எனும் விபரத்தையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மடஹபொல மற்றும் மெதகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 50 ஏக்கர் காணிக்கு உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் நபரொருவர் மேற்படி காணிகளில் வசிப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றா ரென்பதை அவர் அறிவாரா ?

(இ) (i) அத்தகைய தனியார் காணியொன்று மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக்காணியின் அளவும், தன்மையும் யாதென்பதையும்,

(iii) மேற்படி காணியின் முதலாவது உரிமையாளர் தொடக்கம் இன்றைய உரிமையாளர் வரையிலான உரித்தறிக்கை என்னவென்பதையும்,

(iv) எவரேனும் தனியார் காணி உரிமையாளர் மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதிவோரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பின் அவர்களுக்கு மாற்றுக்காணிகள் பெற்றுத்தரப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0704 / '08

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு;—(1)

(அ) தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ) 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய ICICI வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று அப்பணத்தை அரசாங்கத்துக்கு கடனாகக் கொடுத்துள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கடன் பெறுவதிலும் பின்னர் அதனைக் கடனாக வழங்குவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் முழு விபரங்களையும்,

(ii) தேசியசேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் இதற்கு முன்னர் ஈடுபட்டிருந்ததா என்பதையும்,

(iii) அவ்வாறாயின் அவை யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை —

(i) அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அதனைக் கட்டுப் படுத்தும் நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில் உபாயத்திட்டம் மற்றும் ஏற்படக்கூடிய அபாயம் தொடர்பாக கவனம் செலுத்தியதா என்பதையும்,

(iii) மேலே சொல்லப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத் தினால் அல்லது நிதி, திட்டமிடல் அமைச்சினால் அல்லது திறைசேரி செயலாளரினால் பணிக்கப்பட்டதா என்பதையும் அத்தகைய பணிப்புகளுக்கான காரணத்தையும்,

(iv) மத்திய வங்கியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா என்பதையும்,

(v) குற்றவியல் தண்டனைக் கோவையின் நியதிகளின் பிரகாரம் தண்டிக்கத்தக்க அதிகாரத் துஷ்பிரயோகச் செயலொன்றில் மேற்சொல்லப் பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனரா என்பதையும்,

(vi) அதன் பொறுப்புகள் மற்றும் வகைகூறும் பொறுப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு விரிவான அபாய மீளாய்வை மேற்கொண்டிருந்ததா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0705 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை கொல்லப் பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) கொலைகாரர் யாரும் அடையாளம் காணப்பட்டுள்ளனரா அல்லது தடயம் எதுவும் கிடைத்துள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவர்களின் பெயர்கள் என்ன என்பதையும், இற்றைவரை எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை என்ன என்பதையும்,

(v) தாக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா மற்றும் அவர்களில் யாரும் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 27 ஆம் திகதி வெளியார் சிலரினால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தாக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வெளியாட்களின் பெயர்கள் என்ன என்பதையும், அதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் என்ன என்பதையும்,

(ii) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குள் நுழைந்து, பணியாட்களைத் தாக்கிய ஆட்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும்,

(iii) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) இச்சம்பவத்தினால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0718 / '08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி நிதியத்தின் உறுப்பினர்களின் பெயர்களையும்,

(ii) அது அமைக்கப்பட்ட திகதியையும்,

(iii) நிதியத்தின் தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலத்திற்கு உடன் முன்னிருந்த உறுப்பினர்களின் பெயர்களையும்,

அவர் சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 5 வருடங்களாக சனாதிபதி நிதியத்தின் ஊடாக ஏற்பட்ட செலவினை ஒவ்வொரு செலவுத் தலைப்பின் பெயருடனும்,

(ii) கடந்த 5 வருடங்களாக ஏற்பட்ட ரூபா 100,000/= க்கு மேற்பட்ட செலவினங்களை வருடாந்த அடிப்படையிலும்,

(iii) சனாதிபதி நிதியத்திற்கான வருமான மூலத்தையும்,

(iv) கடந்த ஐந்து வருடங்களாக இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) கணக்குகள் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியை கணக்காய்வு அறிக்கைகளுடன் அவர் சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) கடந்த 5 வருடங்களாக இற்றைவரைக்கும் அரசியல்வாதிகளுக்கு செலுத்தப்பட்ட தொகையை வருடவாரியாகவும் அச்செலவினங்களுக்கான காரணங்களுடனும்,

(ii) கடந்த வருடத்திலிருந்து இற்றைவரைக்கும் அரசியல்வாதிகளிடமிருந்து வந்த கோரிக்கைகளுள் மறுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கையையும்,

(iii) அவர்களின் பெயர்களையும், மறுக்கப்பட்டதற்கான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0738 / ' 08

7.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) "ஒரு பிரதேச செயலகத்திற்கு ஒரு கைத்தொழிற்சாலை" என்ற 'மகிந்த சிந்தனை' கொள்கை திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் உள்ள 19 பிரதேச செயலகங்களுக்காக எத்தனை தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(ii) அந்தப் பரிதேச செயலகங்கள் எவை என்பதை முறையே அவற்றின் பெயர்களையும்,

(iii) ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களின் உற்பத்தி எவை என்பதையும்,

(iv) அந்தக் கைத்தொழிற்சாலை உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் எவை என்பதை வெவ்வேறாகவும்,

(v) ஒவ்வொரு தொழிற்சாலையின் பொருட்டு 'மகிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த ஒவ்வொரு கைத்தொழில்களின் பொருட்டும் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் எவ்வளவு தொகையை முதலீடு செய்துள்ளார்கள் என்பதையும்,

(ii) உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு முதலீட்டா ளர்களும் இருக்கின்றார்களா என்பதையும்,

(iii) அவ்வாறெனில், அது எந்தெந்த கைத்தொழில்களுக்காக என்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) 2008 ஆம் ஆண்டளவில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப் பட்டுள்ள காலி மாவட்டத்தில் தற்போது நடைறையில் உள்ள நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் எவை என்பதை விபரமாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0742 / '08

8.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) உடுகம டிப்போவுக்குச் சொந்தமான பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பேருந்து வண்டிகளில் சேவையிலீடுபடுத்தக் கூடியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) சிறு திருத்தங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) சேவையில் ஈடுபடுத்த முடியாத பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி டிப்போவில் டிப்போ அத்தியட்சகரில் இருந்து சாதாரண ஊழியர் வரை எவ்வளவு பணியாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் இரவு நேர சேவையில் ஈடுபடுகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தேவையான விடுதி வசதிகள் மிகவும் திருப்தியற்ற நிலையில் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான சுத்தமான குடிநீர் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இவர்களுக்குத் தேவையான உணவக வசதிகள் ஒழுங்காக இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) மிக நீண்ட காலமாக மிகக் குறைந்த வசதிகளுடன் மிகவும் உயர்வானதொரு சேவையை வழங்குகின்ற மேற்படி டிப்போவின் ஊழியர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள குறைந்த வசதிகளை நிறைவு செய்தல் எவ்வளவு காலத்தினுள் நடைபெறும் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

0744/ '08

9.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) 2005 ஆம் ஆண்டளவில் எத்தனை பாதைகளுக்கு கா/உடுகம இலங்கை போக்குவரத்துச் சபை (ஸ்ரீலங்கம) டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டிகளை ஓட்டுவதற்கான பாதை அனுமதிப் பத்திரங்கள் (நேர அட்டவணைகள்) இருந்தன வென்பதை விபரமாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பழைய நேர அட்டவணைகளுக்கு அமைய 2008 யூலை மாதமளவில் எத்தனை பாதைகளில் பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப் படுகின்றன,

(ii) பழைய நேர அட்டவணைகளுக்கு அமைய எத்தனை பாதைகளில் பஸ்வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுவது ஏற்கனவே நிறுத்தப் பட்டுள்ளது,

(iii) இதில் தாக்கமேற்படுத்தியுள்ள காரணங்கள் யாவை,

(iv) கொழும்பு நோக்கி ஓட்டப்பட்ட பயணச் சுற்றுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா,

(v) உடுகம – மண்டலபுர, நெலுவ, வாறுகந்தெனிய மற்றும் தவலம ஹல்விட்டிகல குடியேற்றத் திட்டம் வரை பயணஞ்செய்த பஸ் வண்டிகள் உரிய வகையில் ஓட்டப்படுகின்றனவா,

(vi) பாடசாலைப் பிள்ளைகள் பயணஞ் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்த பயணச்சுற்றுகள் குறைக்கப்படாமல் ஓட்டப்படு கின்றனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) வினைத்திறன்மிக்க டிப்போவாக விளங்கிய உடுகம டிப்போவின் பஸ் வண்டிப் பயணச்சுற்றுகளை பாடசாலை மாணவர்களுக்கும் மக்களுக்கும் வசதியாக அமையக்கூடியவாறு திருத்தியமைப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0775 / '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008.07.22 ஆம் திகதி, இரவு வேளையில், தெற்கு மற்றும் மேற்கு கடற் பரப்பில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சூறாவளியின் விளைவாக மரணமடைந்த மற்றும் காணாமற் போன கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iii) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வள்ளங்களின் உரிமையாளர்களினது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

(v) காணாமற்போனவர்களினதும் மரணமடைந்தவர்களினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்.

(vi) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களையும் உபகரணங்களையும் திருத்துவதற்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0776 / '08

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான தெவிநுவர தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், கடலுக்கு மிகவும் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "லயிட் ஹவுஸ்" ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஹோட்டல் அமைக்கப்பட்ட போது கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கடற் கரையில் ஏதேனும் நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை எத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும்,

(ii) அதற்கமைவாக, மேற்படி நிருமாணப் பணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பொறுப்பினை வகித்தது யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஈ) மேற்படி நிருமாணப் பணி சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0777 / '08

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஆ) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0906 / '08

13.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கெஸ்பேவ நகர சபையினால் 2008ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0919 / '08

14.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 165/3) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலம்—பரிசீலனை.

*3.

ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம்—இரண்டாம் மதிப்பீடு.

*4.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ``2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*8.

விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21..

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரித்தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

34.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0868/ '08

1.

கௌரவ சந்திரசேன விஜேசிங்க,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் 'அ' பிரிவின் 3வது தரத்தின் 'ஆ' பிரிவின் தலைமை அஞ்சல் உதவியாளர், பொறுப்பதிகாரி, நிர்வாக உதவியாளர், அஞ்சல் அலுவலக ஆய்வு பரிசோதகர் மற்றும் அஞ்சல் அலுவலக கணக்குப் பரிசோதகர் ஆகிய பதவிகளின் 2001.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31ஆந் திகதி வரையிலான சேவை முதிர்வு பட்டியலை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) 2001.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31 ஆந் திகதி வரையிலான காலத்தில் தலைமை அஞ்சல் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் நிர்வாக உதவியாளர் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான முன் திகதி இடப்பட்ட கடிதம் வெற்றிடம் ஏற்பட்ட திகதி, வெற்றிடம் ஏற்பட்ட விதம் மற்றும் ஈடுபடுத்த வேண்டிய உத்தியோகத்தரின் பெயர் ஆகியவற்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) ஒருங்கிணைந்த தபால் சேவையின் 'அ' பிரிவின் 3வது தரத்தின் 'ஆ' பிரிவின் தலைமை நிலைய பொறுப்பதிகாரி பதவிகளுக்கு 2002.06.17 ஆந் திகதி தொடக்கம் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருப்பினும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் இவர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) இந்த உத்தியோகத்தர்களில் சிலர் தற்போது அறுபது வயதினை பூர்த்தி செய்து ஓய்வில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால், அவர்களுக்கு முறையான நியமனக் கடிதங்களை வழங்குமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்குவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0955 / '08

2.

கௌரவ சந்திரசேன விஜேசிங்ஹ;— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை 2005.10.12, மற்றும் 2005.10.13 ஆம் திகதிகளில் தபால் தலைமையகத்தில் நடைபெற்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்திலுள்ள பிரதான தபாலதிபதி, நிருவாக உதவியாளர், தபாலக புலனாய்வுப் பரிசோதகர், தபாலக கணக்குப் பரிசோதகர்கள் ஆகியோரின் பெயர், அலுவலக முகவரி ஆகியவை யாவையென அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந் நேர்முகப்பரீட்சையில் அலுவலகரின் சேவை மூப்பு, சேவை அறிக்கை மற்றும் நேர்முகப்பரீட்சையில் காட்டிய திறன்கள் /ஆளுமை ஆகியவற்றின் கீழ் இவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை வெவ்வேறாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0902 / '08

3.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) காலி மாவட்டத்தில் எல்பிட்டிய கல்வி வலயத்தில் தற்போது இயங்கி வருகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது,

(ii) ஒவ்வொரு கல்விக்கோட்டவாரியாக அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் தற்போது பணியாற்றிவரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்திற்குச் சொந்தமாகவிருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை கல்விக்கோட்ட வாரியாக எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகள் எவ்வாண்டில் மூடப்பட்டன,

(iii) சம்பந்தப்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை

என்பதை இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) ஏதேனுமொரு காரணத்தின் நிமித்தம் மூடப்படவிருந்த பாடசாலைகளை மூடப்படும் அபாயத்திலிருந்து தடுக்க அவசியமான பௌதீக வளங்கள், மனித வளங்கள் மற்றும் பிற வசதிகளை வழங்கவும் பாடசாலைகள் மூடப்படுவதைத் தடுக்கவும் அவசியமான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வாரா வென்பதையும் அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0903 / '08

4.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) காலி மாவட்டத்தில் அம்பலாங்கொட கல்வி வலயத்தில் தற்போது செயற்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) இந்த ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(iv) இந்த ஒவ்வொரு பாடசாலையிலும் தற்போது பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கல்வி வலயத்துக்குச் சொந்தமாக இருந்து மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்ட அடிப்படையில் எவ்வளவு,

(ii) இப்பாடசாலைகள் எந்த ஆண்டில் மூடப்பட்டன,

(iii) இப்பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) ஏதேனுமொரு காரணத்தினால் மூடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பாடசாலைகள் மூடப்படும் அபாயத்திலிருந்து தவிர்க்கத் தேவையான பௌதிக மனித வளங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதற்கும் பிற பாடசாலை மூடப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0907 / '08

5.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மஹரகம நகர சபையினால் 2008ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0908 / '08

6.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிஸ்ஸாவெல்ல நகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0909 / '08

7.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஸ்ரீஜயவர்தனபுர மாநகரசபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0910 / '08

8.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மொரட்டுவ மாநகர சபையினால் 2008ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0911 / '08

9.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தெஹிவல — கல்கிஸ்ஸ நகர சபையினால் 2008ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0912 / '08

10.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0920 / ’08

11.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 165/9) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0921/ ’08

12.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 165/15) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0922/ '08

13.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 165/20)வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0923/ '08

14.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 166/15) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0924/ '08

15.

கௌரவ கயந்த கருணாதிலக,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 167/1) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்தகால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென் பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?